# தமிழர் வாழ்வில் பவுத்தம்

**முனைவர் சீமான் இளையராஜா**
**உதவிப் பேராசிரியர்**
**நாட்டுப்புறவியல்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்** *613010*

**பவுத்தம்**

அசோகர் எழுதிவைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்களில் புத்தரின் வாழ்வியல் பற்றிய செய்திகள் அதிகமாகப் பொறிக்கப்பட்டுள்ளன . அசோகர் காலத்தில் தான் பவுத்தம் தமிழ்நாட்டிற்கு வந்தது என்பதற்கானச் சான்றும் , வேறு விதமான புறச்சான்றுகளும் கிடைத்திருக்கின்றது . **மகாவம்சம்**, **தீபவம்சம்** என்னும் பவுத்த நூல்கள் பவுத்தம் வந்த வரலாற்றினையும் , அதை எவ்வாறு போற்றிப் பாதுகாத்து வந்தனர் என்னும் வரலாற்றினையும் விரிவாகக் கூறுகின்றது. பவுத்தம் சாதிப்பிரிவினையை ஏற்காமல்அதைக் கடுமையாக எதிர்த்து வந்தது என்று வரலாற்று அறிஞர்கள் வழிமொழிந்துள்ளனர் . வர்ணப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட ஆரியமதத்திற்கு எதிராக வும், சனாதனத்திற்கு எதிராகவும் பவுத்தம் இருந்தது என்பதற்காகத் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பவுத்த ஸ்தூபிகள் இருந்ததற்கான வராலாற்றுச் சான்றுகள் இருந்துள்ளன. பவுத்த ஸ்தூபிகளை இடித்து, அழித்துஅப்புறப்படுத்தி இருக்கிறார்கள். அங்கு இருந்த பவுத்தத்துறவிகளும் ,பவுத்த ஆர்வலர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் .பவுத்தம் தானாகத் தன் செல்வாக்கை இழந்துவிடவில்லை. ஜைனர்களும்,வைதீகர்களும் மூர்க்கத்தனமாகப் பவுத்தர்களைக் கொன்று குவித்துள்ளனர் . பவுத்தப் பள்ளிகளையும் அடித்து நொறுக்கி தீயிட்டு எரித்துள்ளனர். இப்படி பல வகையான சூழ்ச்சிகளால் பவுத்தர்களை அடித்துத் துரத்தியுள்ளனர். பவுத்த கோயில்களில் கொள்ளையடித்துள்ளனர். அவற்றில் இருந்த புத்தர் சிலைகளைச் சிதைத்து உருவம் மாற்றியுள்ளனர். அவைதான் தற்போது இந்து சமயக் கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன.
அரசவை இலக்கியங்கள் அனைத்தும் பவுத்த , சமண மரபுகளைக் கடுமையாக எதிர்த்தன . பவுத்த, சமணத் துறவிகள் அறத்திற்கு எதிரானவர்களாக வும், நேர்மையற்றவர்களாகவும்சித்தரிக்கப்பட்டுள்ளனர். மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாசப் பிரகடனம் என்ற நூல் இதற்குச் சான்றாகும் . விசாகத்தத்தனின் முத்திர ராஷஸ் நாடகத்தில் , ஒரு சமணனைப் பார்ப்பதே கெட்ட சகுன மாகும்எனக் குறிப்பிடப்ப ட்டுள்ளது. கிருஷ்ண மிஸ்ரரின் – “பிரபோத சந்திரோதயம்” நாடகத்தில்கபாலிகான் என்பவன்பவுத்த, சமணத் துறவிகளுக்கு மதுவையும் , பெண்ணையும் கொடுத்து சைவ மதத்திற்கு அவர்களை மாற்ற முயற்சி செய் த வரலாறுப்பதிவும்பதியப்பட்டுள்ளது.

**பவுத்தக் கோயில்கள்**

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குடைவரைக் கோயில் (வெட்டுவான் கோயில் ) பவுத்த, சமண மரபுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஒரு உதாரணமாகும் . அங்கே செதுக்கப்பட்டிருந்த சமணச் சிற்பங்கள் அழிக்கப்பட்டு அது கி .பி.7ஆம் நூற்றாண்டில் சைவமதக்கோயில்களாக மாற்றப்பட்டன. பவுத்தக் கோயில்கள் இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டது



© 2022, IRJTSR 

குறித்தும், அவை கிராம தெய்வங்களாகத் தாழ்த்தப்பட்டது குறித்தும் மயிலை சீனி .வேங்கடசாமி (1940) கூறியிருக்கிறார்.

தற்போது வணங்கப்படும் திருமால் கோயில் , திருவரங்கர் கோயில் , வரதராசர் கோயில் , வெங்கடேசர் கோயில் , சிவ பெருமான் கோயில் , தியாகராசர் கோயில் , சொக்கலிங்கர் கோயில் போன்றவை வெவ்வேறு பெயர்களுடன் அமைத்துள்ளனர் . இவையெல்லாம் பவுத்தக் கோயில்கள் . இவற்றைப்போலவே பண்டைக் காலத்தில் பவுத்தக் கோயில்களும் புத்தருடைய பல பெயர்களில் தருமராசா கோயில், சாத்தனார் கோயில், முனீசுவரர் கோயில் என்ற பெயர்களிலும் இருந்துள்ளன. தமிழ்நாட்டில் பவுத்தம் நீண்ட காலம் உயிர்ப்போடு மக்கள் மனதில் குடி கொண்டிருந்ததைக் கல்வெட்டுகளும், புத்தரின் உருவச் சிலைகளும் நமக்கு வழிகாட்டுகின்றன . இந்த வழிகாட்டுதலின்படி பார்க்கும்போது பவுத்த மதம் மக்கள் மதமாகத்தான் இருந்திருக்கின்றது . தமிழ்நாட்டில் பவுத்த மதம் தாழ்த்தப்பட்டவர்கள் பின்பற்றும் மதமாக இருக்கிறது என்பதற்காகவேவீழ்த்தப்பட்டது . பவுத்தத்தைப் பின்பற்றியவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக மாற்றப்பட்டார்கள் என்பதை அயோத்திதாசப் பண்டிதரின் எழுத்துக்கள் நமக்கு எடுத்துக்காட்டாக இன்றைய காலக்கட்டத்திலும் இருந்து வருகிறது.

**புத்தரின் உருவச்சிலைகள்**

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் புத்தரின் உருவச் சிலைகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. சின்னசேலம் அருகே 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சின்னசேலம் உலகியநல்லூரில் உள்ள வயலில் பராமரிப்பின்றி பாதிப் புதைந்த நிலையில் புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது . புதுக்கோட்டை மாவட்டத்தில் இராமநாதபுரம் எல்லையின் கடற்கரையில் சுந்தரபாண்டியன் பட்டினத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் – காமாட்சியம்மன் கோயிலில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர்சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது . அரியலூர் மாவட்டம் பிள்ளைப்பாளையம் கிராமத்தில் 2019 ஆகஸ்ட் மாதம் பவுத்த ஆய்வாளர் திரு.பா.ஜம்புலிங்கம் அவர்களால் புத்தர் சிலை கண்டறியப்பட்டது . தமிழ்நாட்டில் பவுத்தத்தின் வளர்ச்சி ஓங்கி வளர்ந்ததனால் தான்சிறு , சிறுகிராமம் முதல் நகரம் வரையில் பவுத்தம் நிலைத்துஇருப்பதை இதன் வழியாக காணமுடிகிறது .தமிழ்நாட்டில் பவுத்தத்தின் செல்வாக்கு ஆழமாக இருந்ததால் தான் தற்பொழுது கூட தமிழகத்தின் வடபகுதியான காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே திருநெல்வேலி வரை பல இடங்களிலும் புத்தரின் உருவச்சிலைகள் தொடர்ந்து கிடைத்த வண்ணமாக இருக்கின்றன.

காவிரிப் பூம்பட்டினத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டறியப்பட்ட கட்டிட எச்சங்கள் பவுத்த கட்டிடக் கலைக்குச் சான்று பகர்கின்றன . அது மட்டுமின்றி 19 ஆம் நூற்றாண்டில் நாகப்பட்டினத்தில் சீனக் கோயிலென அறியப்பட்ட புத்த ஆலயக் கோபுரமும் அதற்குச் சான்றாக உள்ளது . காவிரிப் பூம்பட்டினம், நாகபட்டினம் மட்டுமின்றி தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதி முழுவதும் பவுத்தத்தின் செல்வாக்கு உயர்ந்து இருந்ததை அறியமுடிகிறது . அப்பகுதிகள் நெடுகிலும் ஏராளமான புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வரலாற்று அறிஞர்களின் பார்வை**

தமிழ்நாட்டில் புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்ட 85 ஊர்களை இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் துணை இயக்குநர் திரு தயாளன் பட்டியல் இட்டுள்ளார் . பிற்காலத்தில் இந்து மதம்

செல்வாக்குப் பெற்றபோது அவை இந்து மதக் கோயில்களாக உருவமாற்றம் செய்யப்பட்டு இந்து மதம் தொடர்பான கதைகளுடன் இணைக்கப்பட்டு, பின்னர் நாளடைவில் இவை கிராம கோயில்கள் என்னும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டன என்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி (1940-179).

புகழ் பெற்று விளங்கும் தஞ்சை பெரிய கோயில் , தாராசுரம் கோயில் , சிதம்பரம் நடராசர் கோயில் , காஞ்சிபுரம் அத்திவரதர் கோயில் போன்ற பல்வேறு கோயில்களில் பவுத்த அடையாளங்கள் தென்படுகின்றன என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சோழர்காலக் கோயில்களின் கட்டிடக்கலை குறித்து ஆராய்ந்த சுரேஷ் பிள்ளை (1974) தனது நூலில் தாராசுரம் கோயில் குறித்து விரிவாக பதிவுசெய்துள்ளார் . அக்கோயிலில் பவுத்த கட்டிடக் கலையின் தடயங்கள் காணப்படுவதாக அவர் கூறுகிறார் . திருவலஞ்சுழி கோயிலும் , தாராசுரம் கோயிலும் பவுத்தத்தின் இருவேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சுரேஷ் பிள்ளை (1976) குறிப்பிடுகின்றார். திருவலஞ்சுழி கோயில் மகாயானப் பிரிவையும் , தாராசுரம் கோயில் ஹீனயானப் பிரிவையும் சேர்ந்தவை என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

**பவுத்தத்தின் வீழ்ச்சி**

கி.பி6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வைதீக மதம் தனது அடிப்படையிலான கொள்கைகள் சிலவற்றில் மாறுதல் செய்து கொண்டு புதிய வடிவம் பெற்றது. அதாவது புதிய வடிவம் என்றால் யாகங்களில் உயிர்க் கொலை செய்வதை நிறுத்தியதோடு கொற்றவை , முருகன், சிவன், திருமால் முதலான தெய்வங்களைத் தன் மதக் கடவுளாக ஏற்றுக்கொண்டு புதிய வடிவம் பெற்றுவிட்டது. இந்தப் புதிய வடிவத்துடன் பக்தி இயக்கத்தை மேற்கொண்டபடியால் இந்துமதம் பொதுமக்கள் ஆதரவைப் பெறவும் பண்டையப் பகையுள்ள சைன, பவுத்த மதங்களைத் தோற்கடிக்கவும் செய்தது.

திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்ற சைவ , வைணவத் தொண்டர்கள் தோன்றிப் புதிய இந்து மதத்தை நிலை நாட்டவும் , சைன, பவுத்த மதங்களை அழிக்கவும் புதிய வடிவத்தில் தோன்றினார்கள்.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் இந்து மதம் ஜைன , பவுத்த மதங்களுடன் போர் தொடுத்து அதன் மூலம் வெற்றியும் பெற்றது . இந்து மதத்தின் வெற்றிக்குக் காரணம் என்னவென்றால் அக்காலத்தில் இந்து மதம் பிரிவினையின்றி ஒரே மதமாக இருந்ததா ல். திருமால், சிவன் என்று இருவர் அதில் இருந்த போதிலும் வைணவ மதம் என்றும் , சைவ மதம் என்றும் பிற்காலத்தில் பிரிந்து நின்றது போல் , அக்காலத்தில் இந்து மதம் பிரிந்திருக்கவில்லை. புதிய வைதீக மதம் , ஜைன, பவுத்த மதங்களுடன் போராடிய காலத்தில் வைணவம் ,சைவம் என்றும், வடகலை, தென்கலை என்றும் வீரசைவம், சித்தாந்த சைவம் என்றும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படவில்லை. அவை ஒற்றுமையுடன் போரிட்டதால் ஜைன , பவுத்த மதங்களை வீழ்த்தி இந்து மதம் நிலைத்து நின்றது.

அசோகர் காலமாகிய கி.மு.3 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிற்கு வந்த பவுத்த மதம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வரையில் செல்வாக்குடன் இருந்தது. பிறகு மெல்ல மெல்லத் தன் செல்வாக்கை இழக்க நேர்ந்துவிட்டது. பவுத்தம் செல்வாக்குக் குறைந்த பின்பு ஜைன மதம் செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. ஜைன மதமும் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தன்னுடைய செல்வாக்கை இழந்துவிட்டது. அதன் பின்னர் வைதீக மதம் இந்து மதம் என்ற பெயரால் செல்வாக்குப் பெற்றது. இதனால் பக்தி இயக்கமும் , பக்தி

இலக்கியங்களும் தோன்றி மக்களைக் கவர்ந்தன . இதன் அடிப்படையில் இக்காலத்தைப் பக்தி இயக்க காலம் என்று அழைத்தனர்.

**புத்தர் சிலைகளும் கோயில்களும்**

புத்தர் சிலைகள் தலை வெட்டப்பட்டு ஏரி , குளம், கடல், கிணறு , வாய்க்கால் போன்றவற்றில் தூக்கி எறியப்பட்டுள்ளன. பவுத்தர்கள் உயிர் பிழைக்க காடுகளையும், மலைகளையும்தேடி ஓடியுள்ளனர். வெளிநாடுகளுக்கு ஓடி தஞ்சம் அடைந்துள்ளனர் . இதனால் இன்றும் வெளிநாடுகளில் பவுத்தம் உயிர்ப்புடன் இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் பவுத்தம் மெல்ல , மெல்ல அழியத் தொடங்கியது.

பவுத்த கோயில்கள் என்று அழைக்கப்பட்ட கோயில்கள் எல்லாம் அழிக்கப்பட்டு இந்து கோயில்களாக உருமாற்றம் பெற்று இருக்கின்றன. விநாயகர் (பிள்ளையார்) கோயில்களாகவும் மாற்றிவிட்டனர். யானை புத்தரின் அம்சமாகப் புத்தசமய நூல்கள் கூறுகின்றன. பழைய சைவ சமயத்தில் விநாயகர் வணக்கம் கிடையாதென்றும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுகளுக்குப்பிறகு தான் விநாயகர் வணக்கம் சைவ சமயத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டதென்றும் சைவப் பெரியார் மறைமலையடிகள் உள்ளிட்ட அறிஞர்கள் கூறியுள்ளார்.

எதுவெல்லாம் மக்களின் நன்மதிப்பையும் செல்வாக்கையும் பெறுகிறதோ அவற்றையெல்லாம் தன்வயப்படுத்திக் கொள்ளும் தன்மை கொண்டது இந்துத்துவம். இது கட்டுக்கதைகளை கட்டும் , பொய்யான வரலாற்றை புனையும் , இவற்றை பழமையானது எ ன்று சொல்லி புனிதம் கற்பிக்கும் இவற்றின் மூலம் தனதின் பகைமைகளைத் தனதாக்கி சமூகமயப்படுத்தும் . இப்படிதான் அறத்தையும் , அறிவையும், மனிதநேய விடுதலையும் கற்பித்த புத்தரை யானை முகவிநாயகனாக மாற்றினர்.

புத்தர் எனும் விநாயகர்

விநாயகர் என்கிற கடவுள் வழிபாடு வேதகாலத்திலும் இல்லை . சங்ககாலத்திலும் இல்லை . சங்கம் மருவிய காலத்திலும் இல்லை . சங்ககாலத்தில் சேயோன் , மாயோன், வருணன், வேந்தன் என்ற கடவுள்கள்மட்டுமே இருந்தார்கள்.இவர்கள் சொல்லும் பிள்ளையார் , விநாயகர் என்ற கடவுள்கள் இல்லை. குறிப்பாக 6ஆம் நூற்றாண்டில் தான் விநாயக ர் வழிபாடு பிறந்ததாகவும் , தமிழ் மண்ணிற்கு வந்ததாகவும் இலக்கிய குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர். கி .பி.6ஆம் நூற்றாண்டு வரை சமணம் என்று சொல்லப்பட்ட பவுத்தமும் மகாவீரரின் ஜைனமும் பரவி விரவி செழித்து இருந்தது. பிறகு பவுத்தம் நலிவடைந்த பிறகு சைவமும் , வைணவமும் போட்டிப் போட்டுக்கொண்டு பவுத்தத்தை அழிக்கும் முயற்சியில் இறங்கியது . அதன் விளைவாக பவுத்தத் துறவிகளை கொடூரமாக கொன்று குவித்ததனர் . கண்ணில் பட்ட புத்தர் சிலைகளை யெல்லாம் உடைத்தனர் .பவுத்த விகார்களை உடைத்து சைவ கோயிலாகவும், வைணவக் கோயிலாகவும் மாற்றிக்கொண்டனர்.

மக்களிடத்தில் அய்க்கியப் பட்டிருந்த போதி மரமாம் அரசமர வழிபாட்டையும் , அரசமரத்தடியில் இருந்த புத்தர் சிலை வழிபாட்டையும் அழிக்க முடியாத நிலை இருந்தது . இதனை அழிப்பதற்கு விநாயகன் என்று அழைக்கப்பட்ட புத்தர் சிலைகளுக்குப் பதிலாக விநாயகர் என்ற பெயரிலும், பிள்ளையார் என்ற பெயரிலும், யானை முக சிலையை வைத்து திசை மாற்றினர். பிறகு சைவசமயத்தோடு தொடர்புபடுத்தி

சிவனை தந்தையாகவும், பார்வதியை அன்னையாகவும் கொண்டு விநாயகர் பிறந்தார் என்ற கட்டுக் கதையை உருவாக்கினர். இவை அனைத்தும் பக்தி இயக்கக் காலகட்டத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

யானை முகபிள்ளையாரின் பெயர்கள் என்று சொல்லப்படும் விநாயகர் , விக்னேஸ்வரர் , கணபதி , கணேசன், கஜமுகன், கஜபதி என்பவையெல்லாம் பவுத்தத்தின் பிரிவுகளான தேரவாதமகாயான பவுத்த நூல்களிலும், மரபுகளிலும், கவுதம புத்தரை குறிக்கும் பெயர்களாக இருக்கிறதே தவிர யானை முக விநாயகர் என்று எங்கேயும் இல்லை. கி.பி 6ஆம் நூற்றாண்டிலிருந்து தான் இப்பெயர்களை யானை முக பிள்ளையாருக்கு சூட்டப்பட்டு பரப்பப்பட்டுள்ளது.

நாயக் என்றால் நல்ல தலைவன் , சிறந்த குரு, நல்ல நாயகன், என்று பொருள். எனவே பவுத்த விகாரின் நாயகன் புத்தரை , விகார் நாயகத் தலைவன் என்பதை விநாயகன் என்றும் , ஏன்?எதற்கு? எப்படி? எதனால்? என்ற வினாக்களைத் தொடுத்து பகுத்தறிவை விளக்கி நிலைநாட்டியதால் வினா நாயகன் என்பதே விநாயகன் என்று புத்தர் போற்றப்பட்டார்.

ஈசன் என்றால் தலைவன் என்று பொருள். துன்பம் நிறைந்த வாழ்க்கையில் நல்வினை செய்து தீய வினைகளை நீக்கி நலம் பெற பஞ்சசீலம், எண்வகை மார்க்கம் , போன்றவைகளை கற்பித்து துன்பம் என்னும் வினைகளை போக்கும் தலைவன் என்பதையே விக்னேஸ்வரன் என்று புத்தரை போற்றினார்கள். பண்டைய காலத்தில் முடி அரசுகளை ஜனபதம்என்றும் முடியரசு இல்லாதவைகளை சங்கம் என்றும், கணம் என்றும் இருந்தன. கணம் என்று சொல்லப்படும் நாட்டினை ஆளும் குடும்பத்தில் பிறந்து அறத்தின் அதிபதியாக விளங்குவதால் கண அதிபதி என்பதே கணபதி என்று புத்தர் போற்றப்பட்டார். எனவே பவுத்தத்தை வீழ்த்தவே புத்தனின் பெயர்களைக் கொண்டே யானை முக விநாயகரை நிறுவி அதற்கான பண்பாட்டு விழாக்களை கட்டமைத்து திசைமாற்றியுள்ளனர்.

இவர்கள் சொல்லுகின்ற அழுக்கு உருண்டையில் இருந்து சிவனும், சக்தியும் யானை உருவம்கொண்டு, உடல் சேர்க்கை கொண்டு, யானை முகத்தான் பிறந்தான் என்று ஏராளமான யானை முக விநாயகர் பிறந்த கதைகளைச் சொல்லி வருகின்றனர் . இது நம் பகுத்தறிவுக்கும் , அறிவியலுக்கும் உகந்ததா என்பதை நாம் சிந்துத்துப் பார்க்கவேண்டும்.

கிராம தேவதைகள்

மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி போன்றவர்களைத் தெய்வங்களாக மதித்துப் பண்டைக்காலத்தில் பவுத்தர்கள் வணங்கி வந்தனர். அக்கோயில்களை இந்துக்கள் பிற்காலத்தில் கைப்பற்றிக் கொண்டு அவற்றிற்கு காளி , பிடாரி , திரவுபதியம்மன் என்னும் புதுப்பெயர்கள் சூட்டி கிராம தேவதைகளாக்கிவிட்டனர்.

காஞ்சிபுரத்தில் வீடுபேறடைந்த மணிமேகலை என்னும் காவியத்தலைவியாக மணிமேகலை ஆலயந்தான் காஞ்சி காமாட்சி அம்மன் கோயில். இந்த ஆலயத்திலுள்ள அன்னபூரணி அம்மன் சிலைதான் மணிமேகலா தெய்வத்தின் சிலையாகும். காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலைப் பவுத்தர்களின் தாராதேவி ஆலயம் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தற்காலத்தில் கிராமங்களில் திரவுபதி அம்மன் ஆலயம் என்னும் பெயருடன் இருக்கும் ஆலயங்கள் எல்லாம் பண்டைக்காலத்தில் பவுத்தர்களின் தாராதேவியின் ஆலயங்களாக இருந்தன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தாராதேவி ,மங்களாதேவி,சித்ராதேவி முதலான பவுத்தப் பெண்

தெய்வங்களின் கோயில்களும் பிற்காலத்தில் இந்துக்களால் கிராம தேவதைக் கோயில்களாகவும், அம்மன் கோயில்களாகவும் மாற்றப்பட்டன.

எனவே தமிழ்நாட்டிலுள்ள பல கோயில்கள் பவுத்த கோயில்கள் தான் என்று ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். புத்தர் இறந்த பிறகு அவருக்கு உலகெங்கும் சிலைகள் வைத்தனர். தருமபீடிகை, பாதபீடிகை, ஆகிய உருவங்கள் மட்டும் பவுத்தர்களால் வணங்கப்பட்டன. தருமபீடிகைஎன்பது சக்கரம் போன்ற உருவம் அமைத்து வணங்கப்படுவது.பாதபீடிகை என்பது புத்தரின் பாதங்கள் போன்று உருவம் அமைத்து வணங்கப்படுவது.

**அரசமரமும் புத்தரும்**

அரசமரம், வேப்பமரம் ஆகிய மரங்களைத் தெய்வமாக வணங்கும் பழக்கமுடையவர்களாக இன்றைக்கு மக்கள் இருக்கிறார்கள் .இந்தஅரசமர வணக்கமும் , வேப்பமர வணக்கமும் பவுத்தர்களால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்து சமயம் பவுத்த சமயத்தை அழித்துவிட்டாலும், பவுத்த சமயக் கொள்கைகளான அரசமர வழிபாடும் , வேப்பமர வழிபாடும் அழிக்கப்படாமல் இன்று வரையில் போற்றப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரசமரத்தையும் , வேப்பமரத்தையும் சுற்றி வந்து வரம் கேட்டு வணங்குகின்ற சடங்கு முறைகள் இன்றும் இருக்கிறது . இக்காலத்து மக்கள் இந்த வணக்கத்தை உண்டாக்கியவர்கள் பவுத்தர்கள் தான் என்பதை அறியவில்லை.ஆனால் இவ்வழிப்பாட்டையும், சடங்குமுறைகளையும் உண்டாக்கியவர்கள் பவுத்தர்கள் தான் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

போதி என்னும் அரசமரம் பவுத்தர்களுக்குப் புனிதமான அடையாளச் சின்னமாகும். ஏனென்றால் போதி மரத்தடியில் அமர்ந்து அமைதியான சிந்தனையில் ஆழ்ந்திருந்த போதுதான் புத்தருக்கு மெய்யறிவு உண்டாயிற்று. ஆகையால்பவுத்தர்கள் அரச மரத்தைப் புத்தரைப்போலவே புனிதமானதாகப் போற்றி வணங்கி வருகிறார்கள்.

**பயன்பட்ட நூல்கள்**

[1] பவுத்தமும் தமிழும் - மயிலை சீனி.வேங்கடசாமி

[2] மணற்கேணி இதழ் - து.இரவிக்குமார்

[3] பவுத்த தத்துவ இயல் - இராகுல் சாங்கிருத்யாயன்

[4] பகவான் புத்தர் - தர்மானந்த கோஸம்பி

[5] பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் – க.கைலாசபதி

[6] தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் – டாக்டர் கே.கே.பிள்ளை

[7] கவுதம புத்தரின் வாழ்வியல் வேதம் – ஸ்ரீ பாலசர்மா

[8] பவுத்தப் பண்டிகைகள் – சீமான் இளையராஜா

[9] பன்முக ஆளுமை அயோத்திதாசப் பண்டிதர் – சீமான் இளையராஜா